உடக அறிக்கை
தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2022.04.18 |

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2022 மாச்சு

## தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகள் இரண்டிற்குமான கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் 2022 மாச்சில் விரிவடைந்தன

**தயாரிப்பு நடவடிக்கைகளில் பருவகால போக்கினைத் தொடர்ந்து தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் 57.8 சுட்டெண் புள்ளிகளுக்கு அதிகரித்தாலும், முன்னைய ஆண்டுகளைவிட மெதுவான வீதத்திலேயே காணப்பட்டது.** பருவகாலக் கேள்வியினைத் தொடர்ந்து உற்பத்தி, புதிய கட்டளைகள், தொழில்நிலை துணைச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் இவ்வதிகரிப்பிற்குப் பிரதான காரணமாக அமைந்தது.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி துணைச் சுட்டெண்களில், குறிப்பாக புடவைகள் மற்றும் ஆடைத் துறைத் தயாரிப்பில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்பிற்கு பருவகால விடுமுறைநாட்களை நோக்கிய முன்னேற்பாட்டு ஒழுங்குகள் காரணமாக அமைந்தன. 2022 மாச்சில் உணவு மற்றும் குடிபானத் தயாரிப்புத் துறையில் புதிய கட்டளைகள் அதிகரித்த போதிலும், வழங்கல் பக்க தடைகளை பிரதான காரணமாகக் கொண்டு புத்தாண்டுக்கான கேள்வியினை நிறைவுசெய்தல், அதனுடன் தொடர்புபட் உற்பத்தி மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பன குறைவடைந்தே காணப்பட்டன. அட்டவணைப்படுத்தப்பட்ட மின் துண்டிப்பிற்கு மத்தியில் எரிபொருள் பற்றாக்குறையானது பொருட்கள் விநியோகம் தொடக்கம் பணியாளர்களின் போக்குவரத்து வரை தமது உற்பத்தித் திட்டங்களை பல கோணங்களிலும் இடையூறுக்குள்ளாக்கியதாக பல பதிலிறுப்பாளர்கள் சுட்டிக்காட்டினர். நிரம்பலர் விநியோக நேரமும் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் நீட்சியடைந்தது. மேலும், உள்நாட்டுச் சந்தையில் வேண்டப்பட்ட அளவுகளில் கிடைக்கப்பெறாமை அத்துடன் பொருட்களை இறக்குமதி செய்வதற்காக நாணயக் கடிதங்களைத் திறப்பதில் இடர்பாடுகள் காரணமாக கொள்வைனவுகளின் இருப்பு வீழ்ச்சியடைந்தது.

| மாறி | பெப் 2022 | மாச் 2022 | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **52.5** | **57.8** | **+** | **அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச்சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 59.0 | 66.5 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 45.0 | 56.9 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| தொழில்நிலை | 46.5 | 52.2 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| கொள்வனவுகளின் இருப்பு | 47.5 | 45.2 | - | சுருக்கமடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 63.6 | 57.5 | - | நீட்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

நாட்டில் நிலவுகின்ற நிச்சயமற்ற சூழல்நிலை காரணமாக அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான ஒட்டுமொத்த எதிர்பார்க்கைகள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் குறிப்பிடத்தக்களவு சீர்குலைந்தது.

**தயாரிப்பு கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 57.8**

2022 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 5.3 சுட்டெண் புள்ளிகள் கொண்ட அதிகரிப்பு

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

### *உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு*

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் 2022 பெப்புருவரியிலிருந்து 0.7 சுட்டெண் புள்ளிகள் வீழ்ச்சியுடன் மாச்சில் 53.0 பெறுமதியினைப் பதிவுசெய்தது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 மாச்சில் ஐக்கிய அமெரிக்கா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் உயர்வான வேகத்தில் அதிகரித்த அதேவேளை ஐரோப்பிய வலயம், ஐக்கிய இராச்சியம், இந்தியா, ஆகிய நாடுகளில் இச்சட்டெண் மெதுவான வீதத்தில் அதிகரித்தது. எனினும், சீனா மற்றும் ரஷ்யா என்பவற்றின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 மாச்சில் சீர்குலைந்தது.

*மூலம்: மார்க்கிட்[1], 2022 ஏப்பிறல் 16இல் உள்ளவாறு*

*1 மார்க்கிட் நிறுவனமானது நிதியியல் தரவுப் பணிகள் தொடர்பான முன்னிலையான உலக பன்முகத்தன்மை வாய்ந்த வழங்குநராகும். இது உலக கொ.மு.சு தொகுப்பாளராக அடையாளங்காணப்படுவதுடன் யூரோ வலயம் போன்ற முக்கிய பிரதேசங்கள் உள்ளடங்கலாக 30க்கும் மேற்பட்ட நாடுகளுக்கு கொ.மு.சு இனை தொகுக்கின்றது.*

**பணிகள் துறை கொ.மு.சுட்டெண், 2022 மாச்சில் 51.3 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து பணிகள் துறை முழுவதும் விரிவடைதலினை எடுத்துக்காட்டுகின்றது.** இதற்கு, புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள், மற்றும் தொழில்நிலை துணைச் சுட்டெண்களில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்கள் ஏதுவாகின.

2022 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 2022 மாச்சில் குறிப்பாக, நிதியியல் பணிகள், ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள், தொலைத்தொடர்பு மற்றும் காப்புறுதித் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகளுடன் புதிய வியாபாரங்கள் உயர்வான வேகத்தில் அதிகரித்தன.

பருவகாலத்தைத் தொடர்ந்து, தொழில் நடவடிக்கைகள் மாச்சில் மெதுவான வேகத்திலேனும் தொடர்ந்தும் வளர்ச்சியடைந்தன. அதற்கமைய, நிதியியல் பணிகள், போக்குவரத்து, காப்புறுதி, உண்மைச் சொத்து அத்துடன் தகவல்தொழில்நுட்ப செய்நிரலாக்கல் ஆலோசனை துணைத் துறைகள் மாதகாலப்பகுதியில் மேம்படுதல்களை அறிக்கையிட்டன. எவ்வாறிருப்பினும், தொழிற்பாட்டுச் செலவு அழுத்தங்கள், நீடித்த மின் துண்டிப்புகள், எரிவாயு, எரிபொருள் மற்றும் ஏனைய உள்ளீடுகள் தொடர்புபட்ட வழங்கல் பற்றாக்குறைகள் என்பன அநேகமான துணைத் துறைகளின் வியாபாரத் தொழிற்பாடுகளை எதிர்மறையாகப் பாதித்தன. அதேவேளை, வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு அதேபோன்று ரஷ்யா - உக்ரேன் போர் என்பன பல்வேறு ஏனைய பணிகள் துணைத் துறைகளுடன் தொடர்புபட்ட கேள்வியினை நலிவடையச்செய்தன. அதற்கமைய, தொழில் நடவடிக்கைகள் குறிப்பாக, மொத்த மற்றும் சில்லறை வர்த்தகம், தங்குமிடவசதி, உணவு மற்றும் குடிபானங்கள், மனித சுகாதாரம் அத்துடன் கல்வித் துணைத் துறைகள் தொடர்புபட்டவை மாதகாலப்பகுதியில் சீர்குலைவுகளைப் பதிவுசெய்தன.

அடிப்படையில், பருவகால கேள்வியினை நிறைவேற்றிக்கொள்வதற்கு புதிய ஆட்சேர்ப்புக்கள் செய்யப்பட்டமை காணரமாக தொழில்நிலை மாச்சில் அதிகரிப்பினைப் பதிவுசெய்தது. எவ்வாறாயினும், நிலுவையிலுள்ள பணி மாதகாலப்பகுதியில் மெதுவான வேகத்தில் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்தது.

| மாறி | பெப் | மாச் | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **51.8** | **51.3** | - | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | **கொ.மு.சு துணைச்சுட்டெண்கள்** | | |
| புதிய வியாபாரங்கள் | 55.0 | 56.8 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 56.5 | 52.1 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 47.0 | 54.2 | + | வீழ்ச்சியிலிருந்து அதிகரிக்கின்றது |
| நிலுவையிலுள்ள பணி | 46.3 | 48.9 | + | வீழ்ச்சியடைகின்றது, மெதுவான வீதத்தில் |
| நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் | 54.0 | 44.8 | - | அதிகரிப்பிலிருந்து வீழ்ச்சியடைகின்றது |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

உயர்வடைகின்ற நிச்சயமின்மைகள் மற்றும் நீடித்த மின்துண்டிப்புக்கள், எரிபொருள் அத்துடன் எரிவாயு மற்றும் வேறு உள்ளீடுகளின் பற்றாக்குறையான வழங்கலுடன் தொடர்புபட்ட சவால்கள், வெளிநாட்டுச் செலாவணிப் பற்றாக்குறைக்கு மத்தியில் இறக்குமதி தொடர்புபட்ட சிக்கல்கள் மற்றும் கட்டுப்பாடுகள், செலாவணி வீதத்தில் நெகிழ்ச்சித்தன்மைக்கு இடமளித்ததுடன் இணைந்த உள்ளீட்டு விலைகளில் சடுதியான அதிகரிப்புக்கள், நாட்டின் அரசியல் மற்றும் சமூக அமைதியின்மை என்பவற்றுடன் 2021 ஓகத்திலிருந்து முதற்தடவையாக அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் சீர்குலைந்தன.

**பணிகள் கொ.மு.சு சுட்டெண் பெறுமதி 51.3**

**2022 பெப்புருவரியுடன் ஒப்பிடுகையில் 0.5 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சி**

**கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்**




மூலம்: இலங்கை மத்திய வங்கி

## *உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு*

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2022 பெப்புருவரியின் 54.0 இலிருந்து 2022 மாச்சில் 53.4 இனைப் பதிவுசெய்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளின் விரிவடைதல் ஒன்றினைக் காண்பிக்கின்றது.

ஐக்கிய அமெரிக்கா, இந்தியா மற்றும் ஐக்கிய இராச்சியம் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2022 மாச்சில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தமையினை எடுத்துக்காட்டிய அதேவேளை சீனா மற்றும் யப்பானின் கொ.மு.சுட்டெண் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*(மூலம்: மார்க்கிட்[1], ஏப்பிறல் 16, 2022 இல் உள்ளவாறு)*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது "வியாபித்தல் சுட்டெண்ணாக" கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.

கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.

கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | | |
|---|---|---|
| தொழில்நிலை | : | நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : | உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : | கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : | வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக பூர்த்தி செய்யப்படாத கட்டளைகள் |

மற்றைய மாறிகள் சுயமான விளக்கத்தினைக் கொண்டுள்ளன.